திரு. ஏ. ஆர். பெருமாள் : தலைவர் அவர்களே, நிலங்களின் மதிப்பு என்ன என்ன, பிராந்தியத்திற்கு என்ன, ஏக்கருக்கு என்ன விலை என்பது எல்லாம் நிர்ணயித்து அந்த மதிப்பில்தான் பதியவேண்டுமென்று சொல்கிறார்களே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுதான் முன்பே சொன்னேன்.

மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் தேர்வு

*205 **வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1962 முதல் 1966 வரையில் மருத்துவக் கல்லூரிகளுக்கு (M.B.B.S.) மாணவர்கள் எந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் ?

(இ) P.U.C.-யில் இரண்டு ஆண்டுகள் Fail ஆகியவர்களையெல்லாம் தேர்ந்தெடுத்தது உண்மையா, விவரம் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) மாணவர்கள் அவர்களுடைய பல்கலைக் கழகத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையிலும், நேர்முக பேட்டியில் அளித்த விடைகளின் அடிப்படையிலும் ஆண்டுதோறும் அரசினரால் அமைக்கப்பட்ட தேர்வுக் குழுவால் மருத்துவக் கல்லூரி படிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

(இ) விவரங்கள் இல்லை. விதிகளின்கீழ் அம்மாதிரியான தேர்வுகளுக்கு எவ்விதத் தடையும் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், உபகாரச் சம்பளம் கொடுப்பதிலே உபகாரச் சம்பளம், பார்வர்ட், பேக்வர்ட், மோஸ்ட் பேக்வர்ட், ஷெட்யூல்ட் இப்படியெல்லாம் கணக்கிட்டு உபகாரச் சம்பளமும் மார்க்குகளில் சலுகையும் கொடுக்கப்படுகிறது. ஆனால் மிகவும் பின்தங்கிய, அதிகமாகத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு முதல் சலுகை தேர்வு கிடையாதே, இனி மேலாவது முதல் சலுகை தேர்வு கொடுப்பதற்கு முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தாழ்த்தப்பட்டவர்களுக்கு குறிப்பிட்ட சத விகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே பின்தங்கியவர்களுக்கும் குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் மருத்துவ படிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

Dr. H. V. HANDE : These medical college admissions have become a serious business. There is no basis. A lot of complaints are there against Government . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒவ்வொரு முறையும் சொல்கிறேன். கேள்வி நேரத்திலே எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் இருக்கக்கூடாது என்று. அமைச்சர்களிடமிருந்து ஏதாவது செய்திகள் தெரிந்துகொள்வதற்கு தான் கேள்வி போடவேண்டும்.

2. அவையுரிமைக் கேள்விகள்

(i) டாக்டர் எச். வி. ஹாண்டே மீது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ரொம்ப சந்தோஷம். நீங்களும் எதிர்க்கட்சியில் இருந்தீர்கள். தி.மு.க. எதிர்க்கட்சியிலிருந்த . . .

(மணியடிக்கப்பட்டது.)